Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.115 /2021

Depositions of : PW 5(LW6)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரீனா | தொழில் | : |
| தந்தை பெயர் | : | முகவரி | : |
| வயது | : | மாவட்டம் | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of June - 2026.

(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

முதல் விசாரணை=

நான் தற்போது பாதுகாப்பு சென்னை காவல் துறையில் காவல் ஆய்வாளரா பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2021 அன்று 21.00 முதல் காலை 7.00 ம ணி வரைநொளம்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இரவு ரோந்து பணியில் நானும் தலைமை காவலர் 26164 திரு பாலசுப்பரமணியமும் இருந்த போது அதிகாலை 2.46 மணிக்கு காவல் கட்டடப்பாட்ட அறையில் இருந்து வந்த தகவலின் படி சம்பவ இடமான மங்கல் ஏரி பார்க் அருகில் சென்றோம். அப்போது ஏற்கனவே நொளம்பூர் காவல் நிலைய Patrol வாகன உதவி ஆய்வாளர் பத்ரோஸ் என்பவரும் அவரது வாகன ஓட்டுநர் காவல் ராஜேஷ் என்பவரும் அங்கிருந்தனர். அருகில் கட்டுப்பாட்டு அறைக்கி தகவல் கொடுத்த தர்மராஜ் என்பவரும் அங்கிருந்தார். நான் அவரிடம் விசாரித்த போது அடி தடி நடந்ததாகவும் ஒரு டாட்டா மேஜீக் வண்டி எண். டி.என்.18, Z. 2585 என்ற வண்டியில் இருவர்

சேர்ந்து ஒரு நபரை அடித்ததாவும் அதை தடுக்க சென்ற தர்மராஜையும் அடித்து கொன்று விடுவதாகவும் மிரட்டியதாவும் மேலும் அந்த வண்டியில் இருந்து அடிப்பட்ட நபரை இழுத்து வந்து மங்கல் ஏரி பார்க் அருகில் இருந்த மினி லாரி அருகில் இருட்டான இடத்தில் அடிப்பட்டவரை மல்லாந்து படுக்கவைத்து அருகில் இருந்த குப்பைகளை அடிப்பட்டவர் மீது போட்டு தீவைத்து விட்டதாகவும் உதவி ஆய்வாளர் பட்ரோஸ் மற்றும் காவலர் ராஜேஷ் நெருப்பை அனைத்തததாவும் எங்களிடம் தெரிவித்தார். நான் இந்த விவரத்தை நொளம்பூர் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளரிடம் தெரிவித்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

சம்பவத்தின் போது திருமங்கலம் சரகத்தில் பணி புரிந்தேன். அதில் திருமங்கலம், ஜேஜேநகர், நொளம்பூர் ஆகியவை அடங்கும். காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து எனக்கு தகவல் வந்த போது நான் ஜேஜேநகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட டிஏவி பள்ளி அருகே இருந்தேன். ஆய்வாளரிடம் இந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அரசு வாகனத்தில் தான் வந்தேன். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்று ஆய்வாளரிடம் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து எனக்கு யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை நேரடியாக தான் விசாரித்தார். தர்மராஜா என்னிடம் சம்பவம் எதனையும் பற்றி சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து நான் 20 நிமிடங்கள் கழித்து கிளம்பிவிட்டேன். அப்போதே புகார் கொடுத்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் தர்மராஜா என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் துறை அதிகாரி என்பதால் எனது சக அதிகாரி கேட்டுகொண்டதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் கட்டப்பாட்டு அறைக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.